# மாற்றுயோசனைகளை கூட்டணி சமர்ப்பித்தது; ஜே. ஆருடன் ராஜீவ் இதுபற்றி நாளை பேசுவார்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 5-12-86 வியாழன் (கார்த்திகை 20 ரபியு அவ் 22) முழக்கம் 300

(புதுடில்லி)

இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கான ஓர் முயற்சியாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கை அரசின் அடிப்படைச் செயல்திட்டத்திற்கு மாற்ருக, தனது மாற்று யோசனைகளை வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரியிடம் சமர்ப்பித்துள்ளதாக நேற்றுப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. இப் புதிய மாற்று யோசனைகள் குறித்து இம் மாதம் ஏழாம், எட்டாம் திகதிகளில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறவுள்ள தெற்காசியப் பிராந்திய நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும், இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் விவாதிக்கக் கூடும் என்றும் இவ்வட்டாரங்கள் மேலும் தகவல் தந்தன. தாம் சமர்ப்பித்துள்ள இப் புதிய மாற்று யோசனைகள் சகல அம்சங்களையும் உள்ளடக்கயுள்ளன என்று கூறிய மேற்படி கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், அதன் விபரங்களைத் தெரிவிக்க மறுத்துவிட்டார். "இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும், போர் நிறுத்த ஒப்பந்தம் சீருறச் ...6ஆம் பக்கம் பார்க்க

★ இனப் பிரச்சினை ★ மலையகத்தவர் பிரஜாவுரிமை ★ தமிழ் இளைஞர்கள் கைது

# தொண்டமானுடன் ஜனாதிபதி நேற்றுத் தனியாக ஆலோசனை!

## டாக்காவால் திரும்பியதும் பிரச்சினைகளுக்கு இறுதித்தீர்வு காண்பதாக ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் தொண்டமான் சில முக்கிய பிரச்சினைகளை காரசாரமாக விவாதித்ததையடுத்து, கூட்டம் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தன அமைச்சர் தொண்டமானுடன் சுமார் நாற்பது நிமிடங்கள் தனிமையில் ஆலோசனை நடத்தியதாக தெரியவந்துள்ளது. ஜனாதிபதியும அமைச்சரும் பல விடயங்களை மனம்திறந்து கதைத்ததாகவும் தெரிகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நேற்று முன தினம் எடுத்த சில முக்கிய முடிவுகள், அரசாங்க உயர் மட்டத்தில் சிலருக்கு அதிருப்தியை உண்டு பண்ணியதால் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் தொண்டமான் இது பற்றி விளக்கிக் கூற நேரிட்டதாகவும் கூறப்படுகின்றது.

அமைச்சர் ஒரு சந்தர்ப்பத்தில் "எல்லாத் தமிழரையும் பயங்கரவாதிகள் என ... 6ம் பக்கம் பார்க்க

## பயிற்சிபெற்ற அறுவர் கைது!

பளையில் நேற்று முனதினம் கைதானவர்களில் ஆறு பேர் ... 6 ம் பக்கம் பார்க்க

★ ராஜீவ் அறிவிப்பு

## கூட்டணியின் யோசனைகள் டாக்காவில் பரிசீலனை!

(புதுடில்லி)

இலங்கையில் அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்குமிடையே பரஸ்பர நம்பிக்கை குறைந்து வருவதாலேயே இனப்பிரச்சினை நெருக்கடி அதிகரித்து வருவதாக பிரதமர் ராஜீவ்காந்தி நேற்று தம்மைச் சந்தித்த எதிர் கட்சித் தலைவர்களிடம் சொன்னர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்துள்ள மாற்று யோசனை பரிசீலிக்கப்படுமென்று சொன்ன பிரதமர், ...6 ம் பக்கம் பார்க்க

## வாகனக் கடத்தல் மின்கம்பதண்டனை

(கரவெட்டி)

இயக்கத்தின் பெயரைப் பாவித்து வாகனக் கடத்தல் ...6 ம் பக்கம் பார்க்க

குடிமக்கள் காடுகளுக்குள் தஞ்சம்:

## டொலர், கென்ற் பண்ணையில் ஆயுதப்படையினரின் ரோந்து!

(நெடுங்கேணி)

டொலர், கென்ற் பண்ணைகளில் இருக்கும் ஆயுதப் படையினர் அப்பகுதிகளிலும், அயலிலுள்ள தமிழ்க் கிராமங்களிலும் கால் நடையாக ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்,

இதனல் இப் பகுதிகளிலுள்ள தமிழ்க் குடிமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி காடுகளுக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். அச்சம் காரணமாக காடுகளுக்குள் ஓடிச்சென்ற சில சிறுவர்களைக் காணவில்லையெனவும் கூறப்படுகின்றது

கடந்த ஞாயிற்றுக்கிழமை பட்டிக்குடியிருப்பு பகுதியில் நடை பவனியாக வந்த சீருடையினர் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் கந்தையா தியாகராசா (48) என்பவர் படுகாயமடைந்து நெடுங்கேணி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ரயில் டிக்கட் விற்பனைக்கு பொலிஸ் ராணுவ பாதுகாப்பு

வட பகுதி ரயில் நிலையங்களில் டிக்கட் வழங்குவதற்கான புதிய நடைமுறை நேற்று முதல் அமுலுககு வந்துள்ளது.

யாழ். ரயில் நிலயத்திலிருந்து பயணம் செய்பவர்கள், பயணம் செய்வதற்கு ஒரு தினம் முன்னராகவே யாழ். ஸ்ரேடியத்தில் இதற்காக வென அமைக்கப்பட்டுள்ள காரியாலயத்தில் பணத்தைச் செலுத்தி டிக்கட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நண்பகல் 11-30 மணிவரையுமே இக் காரியாலயம் இயங்கும் என்பதால் டிக்கற் பெறுபவர்கள் அதற்கு முன்னதாக பெற்றுக் கொள்ள வேண்டும்.

முதல் தினமான நேற்று பொலிஸ் இராணுவ பாது - 6ம் பக்கம் பார்க்க

## பூனைவயில் யாழ்ப்பாண லொறிகள் மீது தாக்குதலும் பொருட்கள் கொள்ளையும்!

(வவுனியா)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த பல லொறிகள் கடந்த மூன்று தினங்களாக பூனைவை என்ற இடத்தில் வைத்து தாக்குதலுக்குள்ளாகியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வழியில் மரக்குத்திகள் போட்டு மறிக்கப்பட்டு லொறிச்சாரதி, கிளீனர் ஆகியோர் தாக்கப்பட்டு பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஆயுதபாணிகளாக வழிகளில் காவல் புரிபவர்களே இத் தாக்குதல்களையும், கொள்ளைகளையும் நடத்தியதாக பாதிக் ...6 ம் பக்கம் பார்க்க

## மினிபஸ்கள் வேக ஓட்டம்; விபத்து மரணம் அதிகரிப்பு

குடாநாட்டிலுள்ளதனியார் மினிவான்கள், மினி பஸ்கள் அதிவேகமாகச் செல்வதால் அண்மைக்காலமாக அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இதனல் சிலர் உயிரிழந்தும் உள்ளனர்.

நேற்றுக்காலை ஆனைக்கோட்டையில் யாழ். நகர் நோக்கி வந்த இரு மினிவான்கள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முயன்றபோது சைக்கிளில் வந்த இருவர் தூக்கி வீசப்பட்டதுடன் சைக்கிளும் நொருங்கியது. அவர்கள் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கடந்த சில மாதங்களில் காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை பகுதி - 6ம் பக்கம் பார்க்க

## இலங்கை அரசு மறுக்கின்றது

சர்வதேச மன்னிப்புச் சபை தமது அக்டோபர் மாத அறிக் ...6 ம் பக்கம் பார்க்க

## தலைமன்னர் ரயிலில் கொள்ளை

தலைமன்னரில் இருந்து அனுராதபுரம் சென்ற புகையிரதத் ...6 ம் பக்கம் பார்க்க

## நாவலர் எழுச்சியினல்தான் தமிழ் இன்றும் அழியவில்லை

(எட்வர்ட் லியோன்)

வெள்ளையர்கள் பாடசாலைகள் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலத்தைத் திணிக்க முயன்ற போதுதான், தமிழ் மக்களின் கலாச்சாரம் பண்பாடு, மொழி போன்றவற்றை பாதுகாப்பதற்காக நாவலர் எழுச்சி கொண்டு எழுந்தார். இதனலே தான் இன்றும் எமது தமிழ் மொழி அழிக்கப்படாமல், பாதுகாக் ...6 ம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை 1986ம் ஆண்டுக்கு
## வழங்குநர்களைப் பதிவு செய்தல்

1986ம் ஆண்டுக்கு (அ) இருப்பிலிருந்தும் (ஆ) இறக்குமதி செய்தும் பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்குத் தாமாகவே பதிவு செய்ய விரும்பும் இலங்கையிலுள்ள வியாபார நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள் முகவர்கள், தனி ஆட்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(2) விண்ணப்பங்கள் ''1986ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்,'' எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு 1986-12-20 தேதியில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் இணைப்படியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) குறிக்கப்பட்ட ஒவ்வொரு பொருட்கள் சேவைகளின் இனம் தொடர்பாக வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இப் பல்கலைக்கழகத்துடன் 1985 ஆம் ஆண்டுக்காகப் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் 1986ஆம் ஆண்டுக்கும் புதிய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும் மீளளிக்கப்படாத பதிவு செய்தற் கட்டணத்திற்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப் பெற்ற 25 ரூபா பெறுமதியான காசோலை/காசுக்கட்டளை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

(5) வழங்குநர்களைத்தெரிவு செய்யும்உரிமையைப்பல்கலைக்கழகம் கொண்டுள்ளதுடன் அதனது தீர்மானம் இறுதியானதாகும் கூறுவிலைகளைக் குறித்ததன் பின்னர் வழங்கல் செய்யத்தவறும் அல்லது கட்டளையிட்டதன் பின்னர் அவற்றை உரியகாலத்தில் ஒப்படைக்கத் தவறும் அல்லது மாதிரிகள் விபரக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கு இசைவற்ற வழங்கல்களைச் செய்யும் வழங்குநர்கள் அறிவித்தலின்றி வழங்குநர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவர்.

(6) பின்வரும் தகவல் உட்பட எல்லா விபரங்களையும் விண்ணப்பம் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) பொருட்கள் சேவைகளின் வழங்கல்கள் (பொருட்கள், இறக்குமதி/இருப்பிலிருந்து வழங்குதல்)

(ஆ) தனிப்பட்ட/வியாபார நிறுவனத்தின் பெயரும் முகவரியும்

(இ) தொலைபேசி இலக்கம் - தந்தி முகவரி

(ஈ) வியாபார நிறுவனத்தின் இயல்பு (தனி உரிமையாளர், பங்குடைமை, பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஆகியவற்றில் எது எனக் குறிப்பிடவும்)

(உ) பதிவு இலக்கம் (வியாபாரப் பெயர்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பின்)

(ஊ) வங்கியாளர்கள் பெயர்கள்

(எ) விசாரிக்கக்கூடிய வழிகள் (ஏதாவது இருப்பின்)

(ஏ) கிடைக்கத்தக்க கடன் வசதிகள். எல்லா உரிய விபரங்களை அளிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

### பொருட்கள் வழங்கல்
1) எழுது கருவிகள்
2) அலுவலக உபகரணம்
3) அச்சிடல்
4) பாடக்குறிப்புக்களை இரட்டித்தல்
5) எல்லா வகையான அச்சடித்தலுக்குமான கடதாசிகளும் ஏனைய பொருட்களும்
6) அச்சுப்பாளம், இறப்பர் பொறிகள், பித்களை அடையாளங்கள் முதலியன
7) அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கூட்டல் இயந்திரங்கள், கணிப்பு மானிகள், இரட்டித்தல் இயந்திரங்கள்)
8) நூல்களும் பருவ இதழ்களும்
9) தளபாடம்
10) மரம்
11) கட்டடப் பொருட்கள்
12) கடின உலோகப் பொருட்கள்
13) குழாய்களும் வடிகால் உபகரணங்களும்
14) துப்புரவேற்பாட்டுப் பொருட்கள்
15) மின்சார உபகரணங்களும் உதிரிப்பாகங்களும்
16) இலத்திரன் இணையுறுப்புகள்
17) இயந்திர சாதனங்கள், உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்
18) எல்லா வகையான வாகனங்களுக்குமுரிய உதிரிப்பாகங்கள்
19) ரயர்கள், ரியூப்கள், பற்றறிகள்
20) ஆய்வு கூட உபகரணங்களும் இரசாயனப் பொருட்களும்
21) விளையாட்டு, நலப் பொருட்கள்
22) சீருடைகள் சப்பாத்துக்கள் மழை அங்கிகள், பசைதடவி விறைப்பாக்கி, நெடுஞ் சப்பாத்துகள், குடைகள், தோற் பொருட்கள் ஆகிய சீருடைக்கான பொருட்கள்
23) மட்பாண்டப் பொருட்களும் கண்ணாடிப் பொருட்களும்
24) கலயச்சாலைகளுக்குத் தேவையான உபகரணங்களும் ஏனையபொருட்களும்
25) நிழற்படக்கருவிச் செய்முறைக்கான இருட்டறை உபகரணங்களும் இரசாயனப் பொருட்களும்.
26) நிழற்படம் உருவாக்குவதற்குத் தேவையான உதிரிப்பாகங்கள்
27) புத்தகங்களுக்கு புத்தகம் கட்டுவதற்கான உபகரணங்கள்
28) தோட்டச் செய்கைக்கான உரங்கள், இரசாயனப் பொருட்கள், உபகரணங்கள்

### சேவைகள்
29) அலுவலக உபகரணங்களைப் பழுதுபார்த்தல்
30) சிவில் பொறியியல் பழுதுபார்த்தல், நிர்மாணித்தல் உட்பட கட்டட வேலைகள், வீதியமைத்தல் ஆகியன
31) எல்லாவகையான வாகனங்களும் பழுதுபார்த்தல்
32) போக்குவரத்துச் சேவைகள்
33) வடிகால், நீர்க்குழாய்அமைப்புக்களை பழுது பார்த்தலும் காப்புக்காவல் செய்தலும்
34) புத்தகங்களையும் பருவ இதழ்களையும் கட்டுதல்
35) கதிரை பின்னுதல் உட்பட தளபாடங்களைப் பழுதுபார்த்தல்
36) ஆய்வு கூடங்களில் பயன்படுத்துவதற்கான தாவரங்கள் பொருட்கள், மனித உடல்கள் மிருகங்கள் ஆகியனவற்றை வழங்கல்
37) இறக்குமதி செய்யப்படும் பொருட்களை அகற்றுதல்
38) எல்லாவகையான குளிர்சாதனப்பெட்டிகளையும், குளிரூட்டி இயந்திரங்களையும் இணைத்தலும் பழுதுபார்த்தலும்.

பதிவாளர்:
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.




✽ பாலையூர், தங்கராசா பவுண் தம்பதியின் மகன் தனஸ் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✽ நீர்வேலி, நாகரத்தினம் ரஞ்சிதமலர் தம்பதியின் மகன் கஜன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✽ சுன்னாகம், சந்திரன் சந்திரவதனா தம்பதியின் மகன் நவஜீவன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✽ காரைநகர் களபூமி, நாகேஸ்வரன் ராஜேஸ்வரி தம்பதியின் மகள் தருமிளா இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✽ வேலணை கிழக்கு, கதிர்காமநாதன் லீலா தம்பதியின் மகன் சுதானந்தராஜ் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✽ அளவெட்டி வடக்கு, ஜெயானந்தன் தம்பதியின் மகள் ஜெலிஸ்ரா இன்று தனது முதலாவது பிறந்த நாளைப் பாரிஸில் கொண்டாடுகிறார்.

காரைநகரில்

## மருந்துக்குத் தட்டுப்பாடு

(காரைநகர்)

காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளிகள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வைத்தியசாலை சுற்றயல் கூறு தரமுயர்த்தப்பட்ட பின்னரும் இங்கு போதியளவு மருந்து வகைகள் இல்லாமையால் அயற்கிராமங்களான பொன்னாலை, மூளாய், சுளிபுரம், வட்டுக்கோட்டை போன்ற இடங்களிலிருந்து இங்கு தினமும் சிகிச்சைக்காக வரும் 200 க்கும் மேற்பட்ட நோயாளிகள் ஏமாற்றத்திற்குள்ளாகின்றனர்.

## போக்குவரத்து சீரானது

(கொடிகாமம்)

எழுதுமட்டுவாள் ஆசைப்பிள்ளை ஏற்றத்தடியில் பிரதான வீதியில் குடைசாய்ந்த லொறியை ஓர் தீவிரவாத இயக்கம் நிமிர்த்திக் கொடுத்துள்ளது.

மேற்படி லொறி கண்டி வீதியில் குடைசாய்ந்திருந்ததனல் சில தினங்கள் போக்குவரத்து மிருசுவில் படித்த மகளிர் திட்டம், பழைய வாய்க்கால் சந்தி என்பவற்றுக்கூடாக நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. அனித்தா, வை. எம். சி. ஏ. கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

### தேவை

தினசரி காலை, மாலை பூசைகளும், விசேஷ தினங்களில் விசேஷ பூசைகள் முதலியன நடைபெறும் ஆலயத்திற்கு பூசகர் தேவை. தயவு செய்து விபரங்களுடன், எதிர்பார்க்கும் மாதப்படியுடன் (Al-owance) 20-12-85க்கு முன்பாக கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். செயலாளர்: ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், கொக்குவில்.

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## பிறந்தநாள் வாழ்த்து

### ★ செல்வன் இறஜீவன் ★

மக்கள் வங்கி துரைராசா இரஞ்சிதமலர் தம்பதிகளின் செல்வப்புதல்வன் இறஜீவன் இன்று (05-12-85) தனது முதலாவது பிறந்த தினத்தை கிளிநொச்சியில் வெகு குதூகலமாக கொண்டாடுகிறார்.

இவரை அம்மா, அப்பா, விசுவமடு அப்பப்பா, அப்பம்மா குடும்பத்தினர், ஒட்டுசுட்டான் அம்மம்மா, அம்மப்பா குடும்பத்தினர், மாமன்மார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அன்ரிமார், மைத்துனர்மார், மைத்துனிமார். அக்காமார், தங்கைமார், அண்ணாமார், தம்பிமார், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ மனம் நிறைந்து வாழ்த்துகின்றார்கள்.

கிளிநொச்சி.

## பாஸ்போட், பொன்ட், விசா

★ பாஸ்போட் ★ பொன்ட் ★ விசா

உங்கள் தேவை எதுவாக இருந்தாலும், சகல உதவிகளும் செய்து தரப்படும்.

**C. E. C.**

முனீஸ்வரகபே மேல்மாடி,
சுன்னாகம்.

# தமிழிலக்கியத்தில் பலதுறை அம்சங்கள் நிறைந்துள்ளன

## ரஷ்ய தமிழறிஞர் பூர்ணிகா பாராட்டு

(கொழும்பு)

"தமிழ் இலக்கியம் மானுடத்துவ அடிப்படையில் அமைந்தது. இவ்விலக்கியத்தில் காதல், வீரம், நகைச்சுவை போன்ற பல அம்சங்கள் அமைந்திருந்தாலும் அவை அனைத்திலும் மானுடம் தழுவிய பண்பே மேலோங்கி நிற்கிறது" என்று கூறினார் ரஷ்யத் தமிழ் அறிஞரான கலாநிதி விதாலி பூர்ணிகா. கொழும்பு வலம்புரி கவிதா வட்டத்தினர் (வகவம்) கொட்டாஞ்சேனை முஸ்லிம் வித்தியாலயத்தில் நடத்திய நோன்மதிக் கூட்டத்திலேயே இவர் இவ்வாறு கூறினார்.

டாக்டர் மு.வரதராசனிடம் தமிழ் கற்றதை பெருமையாக குறிப்பிடும் கலாநிதிபூர்ணிகா, தமிழ் அபிமானம் காரணமாக 'தமிழகப் பித்தன்' என்ற புனை பெயரிலும் எழுதி வருகிறார். 20 ஆண்டுகளாக தமிழ் இலக்கியம் தமிழர் பண்பாடு போன்றவற்றை ஆராய்ந்து ரஷ்ய மொழி உட்பட 8 மொழிகளில் இதுவரை 112 கட்டுரைகள் எழுதி இருக்கிறாராம்.

ஆரம்பத்தில் தமிழில் பேசிய கலாநிதி பூர்ணிகா தொடர்ந்து ஆங்கிலத்தில் உரையாற்றினார். இவரது ஆங்கில உரையை எழுத்தாளர் எச். எம். பி. மொஹிதீன் தமிழ்மொழி பெயர்த்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "சென்ற ஆண்டு தமிழர் இலக்கியமும் பண்பாடும் பற்றி ரஷ்ய மொழியில் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டேன். அப்படி வெளியிட்ட 30 ஆயிரம் பிரதிகளும் 2 வாரங்களுக்குள் விற்பனையாகி விட்டன. இப்பொழுது பொதுவாக ரஷ்ய மக்கள் தமிழ் இலக்கியத்தை ஓரளவு அறிந்திருக்கிறார்கள். இவ்வாறான தமிழர் பற்றிய நூல்களை மேலும் எழுதும்படி எனக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

சென்ற மூன்று வாரங்களாக சென்னையில் தங்கி இருந்தேன், நான் ரஷ்ய மொழியில் எழுதிய தமிழர் பற்றிய நூலை சென்னை என். சி. பி. எச். நிறுவனம் தமிழில் வெளியிட இருக்கிறது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி ரஷ்ய வாசகர்கள் அதிகமாகவே அறிந்து வைத்திருக்கிறார்கள். 1982 ம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழாவை நான் முன்னின்று நடத்தியதையிட்டு பெருமைப்படுகிறேன். பாரதியார் பற்றி 50க்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளேன். அவரது கவிதைகள் சிலவற்றையும் ரஷ்ய மொழியில் மொழி பெயர்த்துள்ளேன்" என்றும் கூறினார்.

தமிழ்ப் பத்திரிகையாளர் சார்பில் எஸ். அருளானந்தம் (தினகரன்) கண. சுபாஸ் சந்திர போஸ் (வீரகேசரி) என். தமிழ் மாறன் (தினபதி) த. தேவதாஸ் (ஈழமுரசு) ஆகியோர் கலாநிதி பூர்ணிகாவுக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்கள்.

இவற்றில், பூர்ணிகா 'ஈழமுரசு' பற்றியும் அது வெளிவரும் யாழ்ப்பாணத்தைப் பற்றிய சூழ்நிலை பற்றியும் விசேடமாக கேட்டு அறிந்து கொண்டார். அத்துடன் கூட்டத்தில் கலந்து கொண்ட பழைய, புதிய எழுத்தாளர்களை தனித் தனி விசாரித்து குறிப்பெடுத்துக் கொண்டார்.

பருத்தித்துறை நீதிபதி பேச்சு:

# வைத்தியசாலை அபிவிருத்தி வேலைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு மிக அவசியம்

(புலோலி)

"வைத்தியசாலைகளின் அபிவிருத்தி மேம்பாட்டிற்குப் பொதுமக்களின் உதவிகளும் ஒத்துழைப்பும் மிக இன்றியமையாததாகும் வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் நீக்கப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போதுதான் வைத்தியசாலைகளுக்குச் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளிகள் முழுமையான பயனைப் பெற்றுக்கொள்ள முடியும். பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திகளில் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டப்படவேண்டியதாகும்."

இவ்வாறு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி கருதி வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் நடாத்தப்பட்ட கொடிவார ஆரம்ப விழாவிலே பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை நீதிபதி திரு கே. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். எஸ். கணேசநாதன் தலைமை தாங்கினார். கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஏ. வி. தங்கராஜா வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து உரையாற்றிய நீதிபதி திரு. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டதாவது;

வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்கக் கூடாது. மருந்துகள் தட்டுப்பாட்டால் நோயாளிகள் பெரும் பாதிப்படைவார்கள், சிலவேளைகளில் பல உயிர்களே அநியாயமாக வேண்டி ஏற்படும். இவ்வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நீக்குவதற்காகவே வைத்தியசாலை அபிவிருத்திச் சபை இக்கொடிவாரத்தை அனுஷ்டிக்கின்றது. இக்கொடிவாரத்தின்போது நிதிசேகரிப்பில் ஈடுபடும் தொண்டர்களுக்குப் பொது மக்கள் முக்கியமாக வர்த்தக பிரமுகர்கள் உதவிகளையும், ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும். இக்கொடிவாரத்திற்கு கல்லூரிகளின் பங்கு மிக முக்கியமானது. ஆசிரியர்கள், மாணவர்கள் இதனைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

மாவட்ட வைத்தியஅதிகாரி டாக்டர். கணேசநாதன் தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:-

வைத்தியசாலைகளின் பணிகள் மக்களுக்கு மிக இன்றியமையாத பணிகளாகும். வைத்தியசாலைகளின் சிறந்த பணிகளினால்தான் நோயாளர்கள் நன்மைபெற முடிவதுடன் சிறந்த திடகாத்திரமான சமுதாயத்தையும் அமைக்கமுடியும். வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகவே இக்கொடிவாரத்தை அபிவிருத்திச் சபை நடாத்துகின்றது. இக்கொடிவாரத்தை அபிவிருத்திச் சபை நடாத்தி வைத்திய சாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர். திரு. எஸ். செந்துராசாவும் உரையாற்றினார்.

முதலாவதுகொடியை பருத்தித்துறை நீதவான். திரு. கே. கணபதிப்பிள்ளையிடம் பருத்தித்துறை வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. மு. பொ. வீரவாகுவும் இரண்டாவது கொடியை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். எஸ். கணேசநாதனிடம் நெல்லியடி வர்த்தகர். திரு. க. சிவப்பிரகாசமும் மூன்றாவது கொடியை மகப்பேறு வைத்திய நிபுணர் டாக்டர். எஸ். குழந்தைவடிவேலிடம் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைப் பொருளாளரும், வர்த்தகருமான திரு. சிவ. சிவராமலிங்கமும் பெற்று கொடி விற்பனையை ஆரம்பித்து வைத்தனர்.




பேசாலை பாத்திமா மகாவித்தியாலயத்திலுள்ள அகதிகள் முகாமிலுள்ளவர்களுக்கென மன்னார் லயன்ஸ் கழகம் இலவச வைத்திய சேவையை ஆரம்பித்துள்ளது. இதற்கென "சற்றர்டே றிவியூ" வழங்கிய பத்தாயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை திரு கே. குணரத்தினம் மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு. அ. பாஸ்கரதாஸிடம் கையளிக்கையில் எடுக்கப்பட்டபடம் லயன்ஸ்கழகச் செயலாளர் திரு. வி. தாமோதரம்பிள்ளை, ஜனாப் ஐ. இஸதீன், லயன் டாக்டர் எம். கதிர்காமநாதன், லயன் பொருளாளர் எஸ். எஸ். இராமகிருஷ்ணன், சமூக சேவைத்திணைக்கள அதிகாரி திரு வி. பெர்னாண்டோ ஆகியோர் படத்தில் காணப்படுகிறார்கள்

விவேகானந்த வித்தியாலய விழாவில் பிரதமர்:

# யாழ்ப்பாணத்தில் வீடமைப்புத் திட்டங்களை திறக்கமுடியாத நிலை உருவாகியுள்ளது

(கொழும்பு)

"1956ம் ஆண்டுக்கு முன்னர் எல்லா இன மாணவர்களும் ஓரே வகுப்பில் இருந்து கல்வி கற்றார்கள். என் இளமைக்கால பாடசாலை வாழ்க்கையில் ஓரே வாங்கிலேயே நான்கு இன மாணவர்களும் ஒன்றாக இருந்து கல்வி கற்றோம். என்னுடன் ஒன்றாகப் படித்த அந்தத் தமிழ் மாணவனின் பெயர் இராஜரெத்தினம் என்பதை நான் இன்னும் ஞாபகத்தில் வைத்துள்ளேன். மற்ற முஸ்லிம், பறங்கி மாணவர்களின் பெயரும் முறையே ஜிப்றி, அஹமர் என்பதாகும். இவர்களின் வீடுகளுக்கு நான் செல்வேன், அவ்வாறே அவர்களும் என் வீட்டுக்கு வருவார்கள். இவ்வாறு ஒற்றுமையாக வாழ்ந்தோம். யாழ்ப்பாணம் சென்று பல தனிப்பட்ட வைபவங்களில் கலந்து கொண்டேன். ஆனால் இன்று எனது வீடமைப்புத் திட்டங்களை அங்கு திறந்து வைக்கமுடியாத நிலை இருக்கிறது" இவ்வாறு கூறினார் பிரதமர் ஆர். பிரேமதாசா.

கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் மூன்றுமாடிக்கட்டடமொன்றை திறந்து வைத்துப் பேசுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் செ. மாணிக்கவாசகர் வரவேற்புரை நிகழ்த்தினார். கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ, மாவட்ட அமைச்சர் வீரசிங்ஹ, மல்லிமாராச்சி, உதவி மேயர் ஹுசைன்முகமது இ.தொ.கா.பொதுச் செயலாளர் திரு எம். எஸ். செல்லச்சாமி, கல்விப் பணிப்பாளர் எம்.பலிஹகசார ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

பிரதமர் தொடர்ந்து பேசுகையில், "விவேகானந்த சபையையும் வித்தியாலயத்தையும் நான் சிறு வயது முதலே அறிவேன். இங்கு நடைபெற்ற பல சமய கருத்தரங்குகளில் நான் முன்பு கலந்து கொண்டிருக்கிறேன். இந்த மூன்று மாடிக் கட்டிடத்திற்கு 15லட்சம் ரூபா செலவழிந்திருக்கிறது. இன்னுமொரு மூன்று மாடிக்கட்டடத்தை நான் அடுத்த வருடம் கட்டித் தருவேன். அம்மாடிக் கட்டடத்தின் மேற்பகுதியில் உடற்பயிற்சி செய்வதற்கான கொங்கிறீற்றாலான மண்டபத்தையும் பரீட்சார்த்த ரீதியில்கட்டித் தருவேன்" என்றும் கூறினார்.

பழைய மாணவன் கண சுபாஸ் சந்திர போஸ் நன்றி உரை கூறினார். இறுதியில் உயர் வகுப்பு மாணவிகளின் 'பிரம்மா சரஸ்வதி' என்னும் நாட்டிய நாடகமும் நடைபெற்றது.

# நீதி, நேர்மை சகலரையும் வசப்படுத்த நிச்சயம் உதவும்

(உடுவில்)

"தன்னலமற்ற பொதுநல நோக்கோடு செயல் பட்டால் இவ்வுலகில் எதுவித பிரச்சினையும் ஏற்படாது. ஆண்டவனும் வெற்றியைக் கொடுப்பான். இதற்குச் சான்றாக பஞ்சபாண்டவர்களின் கதையைக் கூறலாம். வனவாசத்தை முடித்துக் கொண்டு அஞ்ஞாத வாசத்திற்குச் செல்லும் பஞ்சபாண்டவர்களான தருமர், நகுலர், அருச்சுனன், சகாதேவன், வீமன், ஆகியோர் இடைவழியிலேயே காலக் கடவுளின் சோதனைக்குள்ளாகின்றார்கள். அப்போது தருமனின் தர்மம், நியாயமான போக்கைக் கண்டு காலக்கடவுள் நகுலர், அருச்சுனன், சகாதேவன், வீமன், ஆகியோரை மீண்டும் உயிர் பெறச் செய்கின்றார். அதேபோலவேநாமும் நீதி, நேர்மையாக நடந்து கொண்டால் எவரையும் நம் வசப்படுத்தி எக்காரியத்தையும் செய்து முடிக்கலாம்."

இவ்வாறு உடுவில் உப- அலுவலகத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக இருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு. வ. பாலசுப்பிரமணியம் தமக்களிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

பிரதம லிகிதர் திரு இ. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் தற்போதைய அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. இ. கணேஷ்வரன் சகல ஊழியர்களாலும் வழங்கப்பட்ட அன்பளிப்பை வழங்கிப் பாராட்டுரை நிகழ்த்தினார்.

திரு. க. சாந்தாகிருஷ்ணன் (மின் அத்தியட்சகர்), திரு. பொ. சிவலிங்கம் (நூலகர், திரு.இ. இராசதுரை(லிகிதர்), திரு. ஆ. நவரட்ணம் (மின் சார ஊழியர்) ஆகியோரும் பராட்டுரை நிகழ்த்தினர்.

# 'ஆசிரியர் பற்றுக்குறையால் பாடசாலை வளர்ச்சி பாதிப்பு'

(புங்குடுதீவு)

"ஆசிரியர் பற்றுக் குறையின் காரணமாகப் பாடசாலையின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படுகிறது வளர்ந்து வரும் இவ்வித்தியாலயத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்கு இது பெரும் தடையாகும். இக் குறைபாட்டினைப் போக்குதற்குக் கல்வித் திணைக்களம் ஏற்றன செய்ய வேண்டும். பாடசாலையின் புரவலர்களாக விளங்கும் பெற்றோர்கள் இது விடயத்தில் உடன் கவனம் செலுத்த வேண்டும். தொண்டர் ஆசிரியர்களை நியமித்தாவது மாணவர்களின் கல்வித் தரத்தைப்பேண முற்பட வேண்டுமெனக் கோருகின்றேன்."

இவ்வாறு ஆசிரியர் திரு. பொ. சபாரத்தினம் புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் விசேட கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் வித்தியாலயத்தின்தேவைகளைப் பூர்த்தி செய்யப் பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் முன் வரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இவ் வித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் திரு. க. சதாசிவம் வித்தியாலய அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. மு. பொன்னம்பலம் ஆகியோருட்பட மற்றும்பலரும்இக் கூட்டத்தில் உரையாற்றினர்

அடுத்த ஆண்டில் வித்தியாலய அபிவிருத்தி கருதி மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்துஇக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

23 ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டிய இவ்வித்தியாலயத்தில் தற்போது பகுதி நேர ஆசிரியர்கள் மூவர் உட்பட 15பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். இவர்களில் இருவர் இவ்வருட இறுதியில் ஓய்வு பெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## அன்பளிப்பு

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற வரும்நோயாளிகளின் நன்மை கருதி பருத்தித்துறை குகன் ஸ்ரூடியோ உரிமையாளரும் சமூக சேவையாளருமான திரு. அ. நாகரத்தினம் (குகன்) முச்சக்கர வண்டியொன்றை வழங்கவுள்ளார்.

### உதய சிந்தனை

*பகைமை ஒருபோதும் பகைமையால் ஒழிவதில்லை, அன்பினால் தான் அது ஒழியும். இது பழமையான நியதி.*

—கௌதம புத்தர்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 3336

## இதய ஒலி

05-12-85 வியாழக்கிழமை (குரோதன கார்த்திகை-20)

# தெற்கில் வசிக்கும் தமிழர்களே! கவனம்

“யாராவது எங்கள் நாட்டின் மீது படையெடுக்கலாம் என்ற பயம் எங்களுக்கு இருக்கிறது. இதற்காக எமது ஆயுதப் படையைப் பலப்படுத்தி வருகிறோம். எந்தப்படையெடுப்பையும் வெற்றி கொள்ள நாம் தயாராகி வருகின்றோம்.''

ஸ்ரீலங்கா சோசலிசக் குடியரசின், சகல நிறைவேற்று அதிகாரங்களும் கொண்ட அதி உத்தம ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள், “இந்தியா ருடே'' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்திருந்த மிக முக்கியமான பதிலையே மேற்குறிப்பிட்டுள்ளோம்.

ஒரு நாட்டின் தலைவன் என்ற வகையில், தனது நாட்டையும், நாட்டு மக்களையும் எந்த வெளிநாட்டுச் சக்திகளிடமிருந்தும் காப்பாற்ற வேண்டியது ஜனாதிபதியின் தலையாய கடமையாகும்.

இந்த நிலையில், ஜனாதிபதி அவர்கள் தனது ஆயுதப் படையைப் பலப்படுத்தி வருவதை எவரும் தவறென்று கருத முடியாது.

ஆனால் குட்டித்தீவான இலங்கையின் மீது எந்த நாடு படையெடுக்கப்போகின்றது? எதற்காக எடுக்கப் போகின்றது? வல்லரசுகளுக்கு அப்படியான ஒரு காரணம் இருக்க முடியுமா?

இவ்வாறான கேள்விகள் ''ஜனநாயக'' நாடான இலங்கையில் வசிக்கும் மக்களுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

இந்தக் கேள்விக்கும் ஜனாதிபதி அவர்கள் இந்தப் பேட்டியில் பதிலளித்திருக்கிறார்.

“இந்தியா இலங்கையின் மீது படையெடுக்குமென நான் எண்ணவில்லை, ராஜீவ்காந்தி அப்படிச் செய்ய மாட்டார்'' என்று திட்டவட்டமான தமது நம்பிக்கையை ஜனாதிபதி இங்கு தெரிவித்துள்ளார்.

இருந்தாலும் கூட இந்தியா மீது ஏதோ ஒரு வகையில் இலங்கைக்குப் பயம் இருக்கிறது என்பதை தமது பதிலின் அடுத்த வரியில் ஜனாதிபதி அவர்கள் அம்பலப்படுத்தி விட்டார்.

“இந்தியா இலங்கைமீது படையெடுக்காது என்று நான் நம்புகிறேன். எனினும் இந்தியா நினைத்தால் இருபத்தினான்கு மணிநேரத்துள் இலங்கையைக் கைப்பற்ற முடியும். என்னையும் கைது செய்யமுடியும்'' என்றும் ஜனாதிபதி இங்கு தனது உள் அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான ஒரு அச்சம் தமது அண்டை நாடான நட்பு நாடான, நடு நிலை நாடான இந்தியா மீது இலங்கைக்கு, ஏற்படுவதற்கு என்னதான் காரணமாக இருக்குமோ என்பதை ஜனாதிபதி தெளிவுபடுத்தவில்லை.

இருப்பினும், இலங்கைத்தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் இந்தியா காட்டிவரும் அக்கறையே இதற்குக் காரணமாகவிருக்க வேண்டுமென்றே ஊகிக்க வேண்டியுள்ளது.

இந்த ஊகத்தையும் கூட ஜனாதிபதி இங்கு தெரிவித்திருக்கும் பயமுறுத்தல் பதிலே ஏற்படுத்துகின்றது.

“இந்தியா இலங்கை மீது தாக்குதல் மேற்கொள்ளுமானல், இங்கு சிங்களவர்கள் மத்தியில் வாழும் தமிழர்களின் கதை முடிந்து விடும்'' என்று ஜனாதிபதி பளிச்செனத் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டு மக்கள் அனைவரும் இதனையே தமது பிறந்தகமாகக் கொண்டவர்கள். இலங்கையில் இன்னமும் ஒற்றையாட்சி தான் நடைபெறுகின்றது.

முழுநாட்டுக்கும் ஜனாதிபதி அவர்களே தலைவர். சகல அதிகாரங்களும் கொண்டவர்.

தமிழர்கள் அனைவரும் இந்நாட்டுப் பிரஜைகள் என்றும், சிங்களப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் மிகவும் பாதுகாப்பாக வாழ்கின்றார்கள் என்றும் அடிக்கடி கூறிவரும் ஜனாதிபதிதான் இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று ஐயமேற்படுகின்றது.

இந்நாட்டு அரசாங்கத்தின் பல உயர்பதவிகளில் தமிழர்கள் இருக்கின்றார்கள் என்று அடிக்கடி தம்பட்டமடிக்கும் இந்நாட்டு ஆட்சி நிர்வாகத்தின் தலைவரா இவ்வாறு எச்சரித்துள்ளார்.

ஏதாவது ஒரு வெளிநாடு இலங்கைமீது படையெடுத்தால் அதற்காகப் பலியெடுக்கப்பட வேண்டியவர்கள் தமிழர்கள் தானா?

தினசரி பலியாக்கப்படும் இனமான நசிந்துவரும் தமிழினம் படையெடுப்பு நடந்தால் பலியாக்கப்படும் இனமாகவும் மாற்றப்படும் நிலை பரிதாபகரமாக்கப்பட்டு விட்டது.

இனியும் சிங்களப் பகுதிகளில் தமிழர்களால் நிம்மதியாக வாழமுடியுமா?

---

**ஈழத்தில் நான் கழித்த இருபத்து மூன்று நாட்கள்...**

# இந்திராவின் இடத்துக்கு ராஜீவை நினைக்கலாமா?

**பி. நெடுமாறன்**

தமிழ் நாடு காமராஜ்–காங்கிரஸ் தலைவர் நெடுமாறன் இலங்கையின் தமிழ் பிரதேசங்களான வடக்கு கிழக்கு பகுதிகளில் அக்டோபர் திங்களில் இலங்கை அரசுக்குத் தெரியாமல் 23 நாட்கள் பயணம் மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை உட்பட தமிழர் வாழும் பல பகுதிகளில் தரைவழியாக 1200 மைல்களும் கடல் வழியாக 300 மைல்களும் பயணம் மேற்கொண்டதாக பத்திரிகைகளுக்கு பேட்டியளித்துள்ளார். இவரின் பயண அனுபவங்களை கட்டுரைகளாகவும் தொடர் கட்டுரைகளாகவும், கேள்வி பதில் வடிவில் பேட்டியாகவும் பல இந்திய பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் பிரசுரித்துக்கொண்டிருக்கின்றன. அண்மையில் தமிழகத்து சஞ்சிகையான ‘குங்குமம்' (22-11-85) இதழில் வெளிவந்த கட்டுரை இங்கு தரப்படுகிறது.

நான் ஈழத்திலிருந்த அந்த 23 நாட்களும் நெருங்கிய உறவினர்களின் இழவு வீட்டில் இருந்தது போன்ற உணர்வில் தான் இருந்தேன். அங்கே சந்தித்த எல்லா மக்களுக்கும் ஆறுதல் சொல்வதிலும் ஆறுதல் பெறுவதிலுமே இருந்தேன்.

தமிழீழத்தில் போராடிக் கொண்டிருக்கும் போராளிகள் அனைவரும் நல்ல இளம் பருவத்தில் உள்ளவர்கள். வாழ்வின் வசந்த காலத்தை அனுபவிக்க வேண்டிய வயதினர்.

தமிழர் சமுதாயத்தின் வரலாற்றில் இத்தகைய வீர இளைஞர்கள் இதுவரை தோன்றியதில்லை. உலகெங்கும் உள்ள தமிழர்கள் இதுகுறித்து பெருமைப்படலாம்.

வீரமே ஆரமாகவும் தியாகமே அணியாகவும் கொண்ட இந்த இளைஞர்கள் காலத்தில் உலகில் தமிழனுக்கு என்று தனிநாடு அமையாவிட்டால் இனி எப்போதும் அத்தகைய வாய்ப்பு இல்லாமல் போய் விடும்.

இலங்கையில் அமைதி நிலவ போர்நிறுத்த ஒப்பந்தம் வழி வகுத்துவிட்டது என்ற மாயை இங்கு உருவாக்கப்பட்டு வருகிறது. ஆனால், உண்மை நிலைமைவேறு. போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னால் செய்து வந்த அட்டூழியங்களை சிங்கள இராணுவம் ஒப்பந்தத்திற்கு பின்னாலும் செய்கிறது.

முன்பு தமிழர்களை அவர்களுடைய பாரம்பரியப் பிரதேசங்களிலிருந்து விரட்டி அடிக்க என்னென்ன காரியங்கள் சிங்கள இராணுவம் செய்ததோ அவைகளைத் தொடர்ந்தும் செய்து வருகின்றது.

நான் அங்கு கணவன்மார்களை இழந்த மனைவிமார்கள், பெற்றோர்களை இழந்த குழந்தைகள், சகோதரனை இழந்த சகோதரிகள் தங்கள் இளம் பிள்ளைகளை இழந்த தாய்மார்கள் என்று ஆயிரக்கணக்கானவர்களை பல முகாம்களில் சந்தித்தேன். இலங்கை இராணுவத்தாலும் சிங்கள கூலிப்படைகளாலும் தாக்கப்பட்டு சொத்துக்களை இழந்து, வீடுகளை இழந்து நிற்கும் அவர்கள் சொன்ன நிகழ்ச்சிகளை கேட்கும் பொழுது என் நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது.

ஒரு பத்து வயதுச் சிறுமி தன் பெற்றோர்களை சிங்கள இராணுவத்தின் துப்பாக்கிக் குண்டுக்கு பறிகொடுத்துவிட்டு தனது தம்பியையும் தங்கையையும் வைத்துக் காப்பாற்ற பாடுபடுவதைச் சொல்லிய போது என் நெஞ்சில் ரத்தம் வடிந்தது.

இருபது வயதான இளம் பெண் தன் கணவனையும் ஒரு வயதுக் குழந்தையையும் சிங்கள இராணுவம் சுட்டுக் கொன்றகொடுமையை விவரிக்கும் பொழுது மூர்ச்சையாகி விழுந்தார்.

முகாமில் வாடும் ஒவ்வொருவருடைய சோக நிலையும் இப்படித்தான். இவர்களுக்குச் சட்ட பூர்வமாக எதுவித உதவியும் செய்ய இலங்கை அரசு முன் வரவில்லை. செய்வதுமில்லை. வீடு இழந்து சொத்துக்களை இழந்து அனாதையாக முகாம்களிலிருக்கும் தமிழர்களுக்கு விடுதலைப் போராளிகளும், மற்றவர்களும் நிதி திரட்டி உதவுகிறார்கள். இதில் தான் இவர்கள் உயிர் வாழ்கிறார்கள்.

அங்கு நான் சந்தித்த அனைவருமே இந்திரா காந்தி உயிருடன் இருந்திருந்தால் சிங்கள அரசு பயந்து கொண்டு இவ்வளவு அட்டூழியங்களைச் செய்யாது என்றார்கள். இப்பொழுது இலங்கை அரசு ‘எதையும் செய்யலாம், இந்தியா கேட்காது' என்ற முடிவுக்கு வந்திருக்கிறது என்றார்கள்.

அங்கே சந்தித்த தமிழர் தலைவர்களில் ஒருவர் “இந்திராகாந்தி சுதந்திரப் போராட்டவீரர். அதனால்அவருக்கு சுதந்திரப் போராட்டத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் விளங்கும். ஆனால், ராஜீவ் காந்திக்கு சுதந்திரப்போராட்டத்தின் கஷ்ட நஷ்டங்கள் புரிய வழியில்லை'' என்று சொன்னார்.

தமிழீழம் கிடைத்தால் தான் தமிழருக்கு விடிவு காலம் என்றுகோயில் குருக்கள் அனைவரும் சொல்கிறார்கள்

தமிழீழப்பகுதியில் 15,000க்கு மேற்பட்ட பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். சிங்களவர் கொடுமைக்கு ஆளாகியுள்ள சமூகங்களில் பிராமண சமூகம் முக்கியமானது. இதுவரை இந்துக் கோயில்களில் 50 க்கு மேற்பட்ட குருக்கள்மார் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.

சிங்கள இராணுவம் இலங்கையில் உள்ள இந்துக் கோயில்களில் புகுந்து மணி அடித்து பூஜை செய்யக் கூடாது என்கிறார்கள். கோயில் மணியை அடித்தால் போராளிகளுக்கு ‘சிக்னல்' கொடுக்கிறாய் என்று சொல்லி குருக்களைச் சுட்டுத் தள்ளுகிறார்கள்.

அர்த்த ஜாமப் பூஜை நடத்தக் கூடாது; மாலை ஐந்து மணிக்கு மேல் இந்துக்கோயில்களைக் திறந்து வைத்திருக்கக் கூடாது என்று இலங்கை இராணுவம் உத்தரவிட்டுள்ளது. கோயில்கள் வழிபாட்டுக்குத் திறந்திருந்தால் உள்ளே புகுந்து சுடுகிறார்கள்.

சிங்கள கூலிப்படையினர் வேறு வேடம்புனைந்து கோயில் சொத்துக்களையும் நகைகளையும் சூறையாடுகிறார்கள். இந்தச் சமூகவிரோதிகளை போராளிகள் தேடிப்பிடிக்கின்றனர்.

ஒரு குருக்களின் மகனும் மகளும் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருப்பதைப் பார்த்தேன். அது குறித்து அந்தக் குருக்கள் பெருமைப்பட்டார்.

இன்னொரு குருக்கள் சொன்னார் - “தமிழ் நாட்டில் உள்ள பிராமண சமூகத்தினருக்கு சொல்லுங்கள், தமிழீழம் கிடைத்தால்தான் இலங்கையில் பிராமண சமூகம் உயிரோடு இருக்கும். இல்லையேல் சிங்கள இராணுவம் எங்களையும் கோயில்களையும் அழித்து விடும்' என்று

தமிழர் பகுதியில் நடந்து வரும் இனப்படுகொலைகளையும் ராணுவம் தமிழரின்சொத்துக்களை பாழ்படுத்தியிருப்பதையும் அந்த மக்கள் தாங்கள் படும் துன்பங்களை எடுத்துரைப்பதையும் (வீடியோ) படங்களாக எடுத்து வைத்திருக்கிறேன்

பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து நான் நேரில் கண்டு தெரிவிப்பேன். அது என்னுடைய கடமை ஆகும். இந்தியாவிலுள்ள மற்றக் கட்சித் தலைவர்களிடம் உண்மை நிலையை எடுத்துச் சொல்லவிருக்கிறேன்.

தமிழ் நாட்டில், தமிழீழ விடுதலை ஆதரவாளர் இயக்கம் (டெசோ) தமிழீழ மக்களுக்கு ஆதரவாக நடத்திய போராட்டங்களைக் கண்டு அந்த மக்கள் மன ஆறுதல் பெற்றிருக்கிறார்கள். தாங்கள் நிர்க்கதியாக விடப்பட்டு விட்டோமோ என்ற நிலையில் இருந்த அந்த மக்கள் (டெசோ) இயக்கம் தோன்றிய பிற்பாடு தங்களுக்குக் குரல்கொடுக்க இனமானமுள்ள தமிழர்கள் - தமிழ்த் தலைவர்கள் இருப்பது கண்டு நம்பிக்கை பெற்று வருகிறார்கள்.

தமிழ்ப்பகுதிகளில் சிவில் நிர்வாகம் என்பது ஏதுமில்லை. காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள், அரசுத்துறை அலுவலகங்கள் எதுவும் சரிவர நடைபெறவில்லை.

தமிழர்கள் கடைகளை இலங்கை இராணுவம் இன்னும் சூறையாடிக் கொண்டிருக்கிறது மன்னார்ப் பகுதியில் அடியோடு மின்சாரம் கிடையாது யாழ்ப்பாணப் பகுதியில் மட்டும் மின்சாரம்இருக்கிறது. பஸ்களில் பள்ளிப் பிள்ளைகள் ஏறிச் சென்றால் அதில் இராணுவத்தினர் ஏறிக்கொண்டு குழந்தைகளை முன்னால் தள்ளி ஒழிந்து கொள்கின்றனர். தாங்கள் போகுமிடத்துக்கு முதலில் சென்று இறங்கிக் கொண்டு பஸ்ஸை விடுவார்கள். இதனால் பள்ளிப்பிள்ளைகள் எப்போது பள்ளிக்கூடம் போவார்கள் என்பது நிச்சயம் இல்லை. இதனால் பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதில்லை.

—5ஆம் பக்கம் பார்க்க

★ தென்னாபிரிக்கத் தேசியவாதத் தலைவர் மண்டேலாவின் மனைவி சூளுரை:

# விடுதலை நாள் வெகுதூரமில்லை; இரத்த வெறிக்கு பழிவாங்கியே தீருவோம்

(ஜொஹனஸ்பேக்)

சிறை வைக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்கத் தேசியவாதத் தலைவர் திரு. நெல்ஸன் மண்டேலாவின் மனைவி திருமதி வின்னி மண்டேலா பிரிட்டோரிய அரசின் இரத்த வெறிக் கொள்கைக்குப் பழிவாங்கப்படும் நாம் விடுதலை பெறும் நாள் வெகு தூரத்தில் இல்லை'என்று சூளுரைத்துள்ளார். பிரிட்டோரியாவுக்கு அருகே தடையுத்தரவையும் மீறி நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு உணர்ச்சி பூர்வமாக உரைத்தார்.

குறிப்பிட்ட இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில் ஏராளமான மக்கள் மத்தியில் அவர் அரசின் தடையுத்தரவையும் மீறி சொற்பொழிவாற்றினார்.

இது இவ்வாறு இருக்க, சமீபத்தில் சத்திர சிகிச்சைக்குள்ளான திரு. மண்டேலா தொடர்ந்தும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்பதும் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறுகையில் அவரை அரசு விடுதலை செய்யும் என்ற ஊகம் பொய்த்து விட்டது என்பதும் குறிப்பிடத்தக்கவை.

## கிழக்குக் கரையோரப் பாதுகாப்பில் பத்தாவது கப்பலாக ஔவையார் இணைவு

(சென்னை)

கிழக்குக் கரையோரப் பாதுகாப்பின் பொருட்டு 'ஔவையார்' என்ற புதிய கப்பல் ஒன்றும் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

இப்பகுதிக் கடலோரப் பாதுகாப்பின் பத்தாவது கப்பல் இதுவாகும். இக்கப்பல் அக்டோபர் மாதம ஒன்பதாம் திகதி இயக்கப்பட்டது. இக் கப்பலை கிழக்குக் கரையோரப் பாதுகாப்புக்குப் பொறுப்பான தளபதி முறைப்படி ஏற்றுக் கொண்டுள்ளார்.

சென்னைக்குத் தன் கன்னிப் பயணத்தைக் கல்கத்தாவிலிருந்து ஆரம்பித்த ஔவையார் சென்னை வந்தடைந்ததும் ஏனைய கரையோரக் கப்பல்களுடன் சேர்ந்து ரோந்துப் பணியில் ஈடுபடும் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே இங்கு 'ரமாதேவி' என்ற கப்பல் உட்பட ஒன்பது கப்பல்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

### இந்திராவின்...

...4ஆம் பக்கத் தொடர்

வங்கிகளில் தமிழ் மக்கள் ரூ. 200 கோடி அளவுக்கு தங்க நகைகளை அடகு வைத்திருந்தார்கள். இந்த நகைகளை கொழும்புககுஎடுத்துச் சென்று விட்டார்கள். மக்கள் பணத்தைக் கொடுத்து நகையைத் திருப்பிக்கேட்டால் தர மறுக்கிறார்கள். அந்த தங்கத்தை திருப்பிக் கொடுத்தால் நீங்கள் அதை தமிழீழப் போராளிகளுக்கு கொடுத்து விடுவீர்கள், அதை அவர்கள் ஆயுதம் வாங்கப்பயன் படுத்துவார்கள் என்று கூறி மறுத்து விடுகிறார்கள்.

இன்று துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களை விடுதலைப் போராளிகள் தான் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சாலைகளைப் போடுவது முதல் உள்ளூர்த் தேவைகளை நிறைவேற்றுகிறார்கள் கிராம நிர்வாகங்கள் நடைபெற 'இணக்கசபை' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளார்கள்.

சுதேசப் பொருட்களை உபயோகப்படுத்துவோம் என்ற உணர்வு தலைதூக்கியுள்ளது தமிழீழத்திலேயே சோப்புகளையும்,தேங்காய் எண்ணையையும் பழரசங்களையும் தயாரிக்கிறார்கள்.

விடுதலைப் போராளிகள் மக்களைப் பாதுகாக்கும் காவலர்களாக மட்டுமல்லாது மக்களின் சேவகர்களாகவும் விளங்குகிறார்கள்.

ஈழம் தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் நான்கு விடுதலைப் போராளிகள் அமைப்பும் தமிழீழ விடுதலைக்காகவும், தமிழீழ மக்களின் நல்வாழ்வுக்காகவும் போராடிக் கொண்டிருக்கும் காட்சிகளைக் கண்டேன்.

என்னை தமிழீழத்திற்கு அழைத்துச் சென்றவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள். கண்ணை இமை காப்பதுபோல் இரவு பகல் தூங்காது என்னைப்பாதுகாத்தவர்களில் நான்கு வீரத் தோழர்களை யாழ்ப்பாணத்திலிருந்துவவுனியாவுக்குத் திரும்பும் பொழுது சிங்கள ராணுவத்தினர் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

சபா, லலித், லாரன்ஸ், ஜீவன் என்ற அந்த நான்கு தோழர்கள் வீரமரணம் அடைந்த செய்தி எனக்கு கிடைத்த போது என்வாழ்நாளில் அடையாத அதிர்ச்சி அடைந்தேன். அந்தவீர இளைஞர்களின் களை நிறைந்த முகம் என் நெஞ்சில் நிலைத்து நிற்கிறது.

விடுதலைப் போராளிகளின் எல்லா அமைப்பின் தலைமை இடங்களுக்கும் சென்றேன். தமிழீழப் போராட்டத்தில் எந்த தியாகத்திற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

சிங்கள அரசின் இராணுவத் தாக்குதல், கொடுமைகள், நித்தய நித்தம் புரியும் கொலைகளைக்கண்டு அஞ்சாது தமிழ் மக்கள் உறுதியோடு இருக்கிறார்கள். அவர்கள் உணர்ச்சியும், ஊக்கமும், உறுதியும் நம்மை நெஞ்சு நிமிர வைக்கின்றன.

'தமிழீழத் தாயகம் அமையப்பே வது' உறுதி என்பதை நான் உணந்தேன்.

தொகுப்பு:

மு. விவேகானந்தன்.

அணுகுண்டு தயாரிப்பதில்லை என்ற

## இனறைய முடிவு வருங்காலத்தை கட்டுப்படுத்தாது-பாரதம்

(புதுடில்லி)

''பாகிஸ்தான் அணு குண்டு தயாரித்து வருகிறது என்பதற்கு எம்மிடம் ஆதாரம் உண்டு. அதற்காகப்பாரதமும் அணு குண்டு தயாரிக்காது. ஆனால் வருங்காலத்தில் இந்நிலை எம்மைக் கட்டுப்படுத்தாது'' என்று பாரத வெளியுறவு அமைச்சர் திரு. பி. ஆர். பகத் நேற்று ராஜ்யசபையில் பேசுகையில் விளக்கினார்.

''ஒவ்வொரு நாட்டுக்கும் பாதுகாப்புத் தேவை. அதை எந்த ஒரு நாடும் புறக்கணித்து விடமுடியாது'' என்று குறிப்பிட்ட அவர், அணுகுண்டுத் தயாரிப்புப் பற்றிய பிரதமரின் அறிவிப்பில் முரண்பாடுகள் உண்டென்ற எதிர்க்கட்சியினரின் குற்றச் சாட்டுகளை மறுத்துரைத்தார்.

''பாகிஸ்தானின் அணுகுண்டுத் தயாரிப்பு எமது பாதுகாப்புத்துறையின் நெடுநோக்கில் ஒரு புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்துள்ளது'' என்றும் சொன்னார்.

### ஆர். வி.க்கு வயது 75

(புதுடில்லி)

பாரதத் துணை ஜனாதிபதி திரு. ஆர். வெங்கடராமன் தனது எழுபத்து ஐந்தாவது பிறந்த நாளை நேற்றுக் கொண்டாடினார்.

பாரதவிமானப்படை, கடற்படை, இராணுவத் தலைவர்கள் அவருக்குத் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

## நமீபிய விடுதலை போரார்ட்டம்: ஸிம்பாப்வேயும் ஆதரவு

(லண்டன்)

தென்னாபிரிக்கப் பிரிட்டோரிய அரசின் இனவெறி அட்டூழியங்களை ஸிம்பாப்வேப் பிரதம மந்திரி திரு. ரொபேட் முகாபே வன்மையாகக் கண்டித்துள்ளார்.

நமீபிய விடுதலைக்கான தமது ஆதரவை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

### பெற்றோர் தினமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு அமெரிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலையின் பெற்றோர் தினமும், பரிசளிப்பு விழாவும் பாடசாலை மண்டபத்தில் இன்று பிற்பகல் மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் தலைமையில் நடைபெறும்

பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர், சுந்தரலிங்கம் கலந்து கொளகின்றார். சிறப்பு விருந்தினராக உடுவில் உதவி அரசாங்க அதிபர் ஆ மகாலிங்கம் பங்குபற்றுவார். பரிசில்களை திரு. சி. குமரவேல் (தலைவர் சுன்னாகம், ப. நோ. கூ. சங்கம்) வழங்குவார், கலை நிகழ்ச்சிகளாக கரகம், நாடகங்களும் நடைபெறவிருக்கின்றன.

ஐ.நா. சபையில் பாரதம் வற்புறுத்து

## பாலஸ்தீனப் பிரச்சினைத் தீர்வு: சர்வதேச அமைதி மாநாடு தேவை

(நியூயோர்க்)

பாலஸ்தீனியப் பிரச்சினைக்குச் சுமுகத்தீர்வுகாணும் வகையில் சர்வதேச அமைதிமாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று பாரதம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் பாரதப் பிரதிநிதி டாக்டர் சுவெல் பேசுகையில் இக்கோரிக்கையை விடுத்தார்.

இது விடயத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் யோசனைகளை நிறைவேற்றுவதற்குப் பந்தோபஸ்துச்சபை முன்முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார்.


பாலஸ்தீனியரின் விடுதலைப் போராட்டத்திற்கு பாரதம் தொடர்ந்து உறுதியான ஆதரவளித்துவரும் என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சமீபத்தில் கூட அறிவித்திருந்ததும் மேற்படி விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் சில வாரங்களுக்கு முன் பாரதம் வந்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

5-11-85ல் அகால மரணமடைந்த

### அ. யோசப் பயஸ் தவகுணராசா (பயஸ்)

அன்னையின் மடியில்- 18-3-68
ஆண்டவன் அடியில்- 5-11-85



எத்தனைதான் சொன்னாலும் எம்மன மடங்காதப்பா எதனைத் தான் நாம் மறப்போம். எங்குமுன் தோற்றமே எத்தனைகாலமொன்றாய் வாழ்ந்தோம், மகிழ்ந்தோம், இனியாம் தனித்தோம்.தம்பி நீஇன்றி, எத்தனைதான் இருந்த லும் உடன் பிறந்தவனே உன்னுதவிபோல் எமக்கு வேறோர் உதவியுண்டோ? இத்தனைகாலம் நாம் பெற்ற உதவி போதுமென்றே தந்தஇறைவன் பறித்துவிட்டான் உன்னை.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அன்போடுவந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், சகல வழிகளிலும் உதவிசெய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உந்தன் பிரிவால் கண்ணீரில் வாடும்:
அப்பா, அம்மா, அண்ணன்மார், அக்காமார், மைத்துனர், மருமக்கள்.

கரம்பொன் தெற்கு,
ஊர்காவற்றுறை.


## சிங்கப்பூர்-பணிப் பெண்கள்

- சிங்கப்பூரில் உள்ள நல்ல கண்ணியமான வீடுகளில் சேவை புரிய பணிப்பெண்களாக செல்பவர்கள் பிரயாண ஒழுங்குகளுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.
- பதிவுசெய்து ஒரு மாதத்தில் பயணம்.

C. E. C.
முனீஸவர கபே மேல்மாடி.
சுன்னாகம்.

ஈழமுரசு

## சின்னக்கடையில் திருட்டுகள் தினசரி அதிகரிப்பதாக புகார்

யாழ்ப்பாணம் — சின்னக்கடைச் சந்தையில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. யாழ்ப்பாணம் கச்சேரியில் பிரதம சிறுப்பராகக் கடமையாற்றும் திரு. என். பத்மநாதனிடமும் திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர். நேற்று புதன்கிழமை பகல் அவருக்கு இந்த அனுபவம் நேர்ந்தது. அவரது முக்கிய தஸ்தாவேஜுகள் சிலவும், இருநூறு ரொக்கப் பணமும் கொண்ட பர்ஸே திருடப்பட்டுள்ளது. சில நாட்களாக சைக்கிள்களும் இங்கு களவாடப்பட்டுள்ளன.

136 தமிழர் வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பு:

# அரசியல் குற்றம் சுமத்தப்பட்ட தமிழருக்கே மேற்கு ஜேர்மனி அரசியல் புகலிடம் வழங்கும்

(பேர்லின்)

மேற்கு ஜேர்மனியில் புகலிடம் கோரிவரும் இலங்கைத் தமிழர்களுக்குப் பெரும் இடர்நிலை ஒன்று தோன்றியுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் அரசியல் குற்றச்சாட்டிற்குள்ளானோர் நிலை வேறுபட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்கு பேர்லினில் உள்ள சமஷ்டி நீதி மன்றம் ஒன்று இலங்கைத் தமிழர்களின் தாயகத்தில் இனங்களுக்கிடையே இடம் பெறும் வன்செயல்கள் மேற்கு ஜெர்மனியில் அவர்கள் புகலிடம் கோருவதற்கு வழிவகுக்கமாட்டாது என நேற்று முன் தினம் தீர்ப்பு வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால் மேற்கு ஜேர்மனியில் புகலிடம் கோரிவரும் பல இலங்கைத் தமிழர்கள் பாதிக்கப்படுவர் என அஞ்சப்படுகிறது.

மேற்கு ஜெர்மனியில் உள்ள நூற்றுமுப்பத்து ஆறு தமிழர்களுக்குப் புகலிடம் அளிக்கப்பட வேண்டும் என்று அங்குள்ள கீழ் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைச் சமஷ்டி நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இன அடிப்படையில் நடைபெறும் மோதல்களைக் காரணம் காட்டி எவருக்கும் மேற்கு ஜெர்மனியில் புகலிடம் கொடுக்க முடியாதெனவும் நீதிமன்றம் தன் தீர்ப்பில் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தமது தாய்நாட்டில் உள்ள அதிகாரிகளினால் அரசியல் ரீதியாகக் குற்றம் சுமத்தப்பட்டு அப்படித் தண்டிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக அகதி ஒருவர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தால் மேற்கு ஜெர்மனியில் அரசியல் புகலிடம் பெற உரிமை உண்டு என்றும் நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது.

கடந்தவருடம் மேற்கு ஜெர்மனியில் எண்ணாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் புகலிடம் கோரியிருந்தனர்.

### மினி....

– 1ம் பக்கத் தொடர்

களுக்கு சேவையிலீடுபடும் மினிபஸ்கள் சில விபத்துக்குள்ளானதால் சிலர் ஸ்தலத்திலேயே பலியானது தெரிந்ததே. இவற்றைத் தொடர்ந்து இப்பகுதி வீதிகளில் வேகமாக வரும் வாகனங்களை கட்டுப்படுத்த சில வீதித்தடைகளை அந்தந்தப் பகுதி மக்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

தற்போதைய நாட்டு நிலைமையால் போக்கு வரத்துசபை பஸ்கள் சீராக நடைபெறுவதால் மக்கள் அதிக கட்டணம் செலுத்தி இந்த மினிபஸ்களில் பயணம் செய்வது குறிப்பிடத்தக்கது.

### தொண்ட....

அழைப்பது நியாயமா? மலையக இளைஞர்களை எதற்காகக் கைது செய்கிறீர்கள்? தமிழ் இளைஞர்கள் என்றால் அவர்கள் எல்லோரும் பயங்கரவாதிகளா?'' என்று கேட்டதாகவும் தெரியவந்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தன அமைச்சரைத் தம்முடன் அழைத்துச் சென்று தனிமையில் ஆலோசனை நடத்தினர். இப்பேச்சுக்கள் சுமார் நாற்பது நிமிடம் நடைபெற்றது. இனப் பிரச்சினைத் தீர்வு, தமிழ் இளைஞர்கள் கைது, மலையக மக்கள் பிரஜாவுரிமை பற்றியே பேச்சுக்கள் இடம்பெற்றன.

டாக்கா மாநாட்டின் பின்னர் நாடு திரும்பியதும் இவை தொடர்பாக இறுதி முடிவெடுப்பதாகவும் ஜனாதிபதி உறுதியளித்ததாகத் தெரிகின்றது.

### பயிற்சி...

முக்கியமான மூன்று இயக்கங்களைச் சேர்ந்தவர்களென்றும் இவர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்களென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

### பூனைவயில்....

1ம் பக்கத் தொடர்

கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு மட்டும் நான்கு யாழ்ப்பாண லொறிகள் இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளன.

### நாவலர்....

1ஆம் பக்கத் தொடர்

கப்படுகிறது.

இவ்வாறு நேற்று மாலை புதிய நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் பெருமான் குரு பூஜை விழாவுக்குத் தலைமை தாங்கிய தினகரன் பிரதம ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் பத்திரிகையாளனுக்கும் நாவலருக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. பத்திரிகையாளன் ஆளுகின்ற யுக்திகளை நாவலர் பெருமான்தான் காட்டிக் கொடுத்தார் என்றார்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் தொடக்க உரை நிகழ்த்தும் போது, நாவலர் கூட சர்ச்சைக் குரியவர் தான் எனவே எங்களுக்கு தாக்கம் எந்த வழியில் ஏற்பட்டாலும் அதை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டு நாவலர் பெருமானுக்குசெய்ய வேண்டிய ஒவ்வொன்றையும் திறம்பட செய்து வைப்போம் என்று சொன்னார்,

அகதிகள் புனர் வாழ்வுக்கழகத் தலைவர் திரு. கா. விஸ்வலிங்கம் சைவத்தை வளர்ப்பதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று தமது வரவேற்புரையில் கேட்டுக் கொண்டார்.

கவிதை நிகழ்வில் திரு. சொக்கன், கல்வயல் குமாரசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்: திரு. நா சோமகாந்தன் நன்றியுரை நிகழ்த்தினார்.

பேராசிரியர் சண்முகதாஸ் பேச்சு;

## உடைமையையும் உயிரையும் இழக்கலாம்; ஆனால் அறிவு உணர்வை இழக்கக் கூடாது!

(அரியாலை நிருபர் இ. அரசகேசரி)

''பாதிக்கப்பட்ட சமுதாயத்தை ஒழுங்காக்குவதற்கு புத்தகக்கல்வி மட்டுமன்றி ஒழுக்க ரீதியிலான சமயக்கல்வியும் அவசியமாகும். இப்பாடசாலை திரு. மு. இராசலிங்கம் அதிபராக வந்த குறுகிய நான்கு மாதகாலத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளதைக் கண்டு நாம் மகிழ்கின்றோம். ஒரு பாடசாலையில அதிபர் பதவி காலியாகும்போது பல பிரச்சினைகள் உண்டாகும், ஆனால் இப்பாடசாலைக்கு இவரை அதிபராக்கினால் ஒளிமயமான எதிர்காலம் இருக்கும் என்று கல்வித் திணைக்களம் நம்பிக்கை வைத்தது. சில ஆசிரியர்கள் தம் பிள்ளைகளைத் தமது பாடசாலையில் சேர்க்காமல் வேறு பாடசாலைகளில் சேர்க்கிறார்கள். ஆனால் இப்பாடசாலை அதிபரின் மகன் இப்பாடசாலையில் கல்வி கற்பது மற்றவர்களுக்கு நல்ல உதாரணமாகும்.''

இவ்வாறு வடபிரதேசக் கல்விப பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா–நிறுவுநர் தினத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தி மங்கள விளக்கேற்றினார். கல்லூரி அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

அதிபர் தனது அறிக்கையில் கூறியதாவது, ''கல்வியைச் சிறந்ததொரு மூலவளமாக கருதிப் பேணிப்பாதுகாத்து வரும் வடபகுதிமக்கள் அவ்வரும் பெருஞ் செல்வத்தை அடுத்த சந்ததியினருக்கு அரண்செய்து வைப்பதில் என்றுமே தவறியதில்லை, கல்வியை ஜீவநோபாயத்திற்கு ஒரு கருவியாகக் கொண்ட காலம் மாறிவருவதை சகல மட்டத்திலும் உள்ளமக்கள் இன்று நன்குணர்ந்துள்ளார்கள். நாட்டில் ஏற்பட்டுவரும் அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களின் விளைவாக இதனைக் கொள்ளவேண்டும். ''இருந்தும் கல்வியின் முக்கியத்துவம் எவ்வகையிலும் குன்றியதாக யாரும் கருதுவதற்கில்லை''.

பேராசிரியர், அ. சண்முகதாஸ் நிறுவுனர் நினைவுரை ஆற்றும்பொழுது ''உடைமையை, உயிரை இழக்கலாம். ஆனால் அறிவு, உணர்வை இழக்கக் கூடாது. கல்வியில் பின்தங்கினால் அறிவிலும் பின் தள்ளப்படுவோம். அறிவு ஆக்கத்திற்கும், அழிவுக்கும் பயன்படுகிறது. அழிவையும் அறிவு பூர்வமாக ஆக்கச் செயலை நோக்கமாகக் கொண்டு செய்ய வேண்டும். கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தே இரண்டாம் உலக மகாயுத்தத்தில்கூட பாடசாலைகள், கல்விக் கூடங்கள், பல்கலைக்கழகங்கள் தாக்கப்படவில்லை. எது நடப்பினும் கல்வி நடைபெறவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

''ஆங்கிலேயர்கள் இந்நாட்டுச் செல்வம் தங்கள் நாட்டுக்குச் செல்லவேண்டும் என்பதைக் குறிக்கோளாக வைத்தே பல நிருவாக வசதிகளை இங்கு ஏற்படுத்தினார்கள். தமது நிருவாக வசதிக்காகவே ஆங்கிலக் கல்வி திணிக்கப்பட்டது. ஒருவர் தனது சொந்தமொழியிலேயே இலகுவாகவும், சுதந்திரமாகவும் சிந்திக்க முடியும்; இக்கல்வி முறையினால் வேட்டி, காற்சட்டை, என்ற இரு பண்பாடுகள் அன்று இருந்தது'' என்றார்.

### மாற்று....

செயற்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் பேச்சுவார்த்தைக்குதக்க சூழ்நிலை ஒன்று உருவாகும்'' என்று திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

''இரு சாரார் மத்தியிலான வேறுபாடுகளைக் குறைத்து நல்ல சூழ்நிலை உருவாவதற்கான முயற்சிகளை பாரதம் தொடர வேண்டும், அப்போதே பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு முடியும்'' என்றும் குறிப்பிட்டார் அவர்.

''எமது நிலைப்பாடு குறித்துப் பாரத அரசுக்குத் தெளிவாக எடுத்துக் கூறிவிட்டோம்'' என்றும் அவர் கூறினார்.

### ரயில்...

காப்புக்கு மத்தியில் இங்கு டிக்கட் விநியோகம் நடைபெற்றது பெருமளவு பொது மக்கள் கியூவில் நின்று டிக்கட் பெற்றார்கள்

### கூட்டணி....

டாக்காவில் இலங்கை ஜனாதிபதியுடன் இது பற்றித் தாம் பேசவிருப்பதாகவும் தெரிவித்தார்.

கொலைகள் தொடர்ந்து இடம்பெறுவதையிட்டு பாரதம் மிகுந்த கவலையடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கை....

கையில் இலங்கையில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றித் தெரிவிக்கப்பட்டவைகளை இலங்கை அரசு மறுத்துள்ளது. திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரம வீரசூரியா செய்தியாளர் மாநாட்டில் நேற்று இதனைத் தெரிவித்தார்.

### தலைமன்னார்...

தில் நேற்று நாற்பத்தையாயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆயுதங்களுடன் வந்த நால்வர் மடுரோட்டில் வைத்து இந்த ரயிலில் புகுந்து பணப் பெட்டியை எடுத்துச் சென்றனராம்.

### வாகன....

1ம் பக்கத் தொடர்

களில் ஈடுபட்ட நபர் ஒருவர் ஈரோஸ் இயக்கத்தால் மொட்டையடிக்கப்பட்டு நெல்லியடியிலுள்ள மின்கம்பம் ஒன்றில் நேற்று நண்பகல் கட்டப்பட்டார்

மேற்படி நபர் தமது இயக்கத்தின் பெயரைப்பாவித்து வாகனக்கொள்ளையில் ஈடுபட்டதாகவும், அண்மையில் நல்லூரைச்சேர்ந்த ஒருவரின் மோட்டார் சைக்கிளைக் கடத்தியபோது கையும் மெய்யுமாக பிடிபட்டு விசாரணையின் பின்னர் இத்தண்டனை வழங்கப்பட்டதாகவும் இங்கு காணப்பட்ட போஸ்ரர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### க. பொ. த. சாதாரணம்

செல்வி நடராசா சுமதியின் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையின் அனுமதிப்பத்திரம் சட்டத்தரணி டபிள்யூ. எஸ். செந்தில்நாதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது அதனை அவரிடம் பெற்றுக் கொள்ளவும்.

### மரண அறிவித்தல்

**கொக்ஸ்மன் மலக்கியாஸ் பொன்னுத்துரை**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் துறைமுக அதிகாரசபை கொக்ஸ்மன் மலக்கியாஸ் பொன்னுத்துரை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இல. 18, மத்தியூஸ் வீதி இல்லத்திலிருந்து 5ம் திகதி வியாழக்கிழமை பி. ப. 4 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 5 - 12 - 1985 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23386